## சுருக்கம்

கைத்தறித் தொழில் – டாக்டர் எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளை – கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகை – ஒரு மாணவன் மற்றும் ஒரு மாணவி என்பதுடன், கூடுதலாக இரண்டாம் நிலை பெறும் ஒரு மாணவன் மற்றும் ஒரு மாணவிக்கும் கல்வி உதவி தொகை வழங்க – ஆணை வெளியிடப்படுகிறது.

---

கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் (டி2) துறை

அரசாணை (நிலை) எண்.138 நாள் 21.06.2013

விஜய ஆனி 7
திருவள்ளுவராண்டு 2044

**படிக்கவும் :–**

1. மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் அமைச்சர் அவர்களால் 2013–2014ஆம் ஆண்டிற்கான கைத்தறி மற்றும் துணிநூல் துறை மானியக் கோரிக்கை எண் 17, கைத்தறி மற்றும் துணிநூல்–இன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்புகள், அறிவிப்பு எண்.6.
2. கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரின் கடிதம் ந.க. எண்.14687/2013/ஓ2, நாள் 28.5.2013.

---

**ஆணை:–**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2013–2014ஆம் ஆண்டிற்கான கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் மானியக் கோரிக்கை எண்.17, கைத்தறி மற்றும் துணிநூல்–இன் கீழ் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்:–

**அறிவிப்பு எண். 6**

**நெசவாளர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு கூடுதல் கல்வி உதவித் தொகை வழங்குதல்**

டாக்டர் எம்.ஜி.ஆர். நல்வாழ்வு அறக்கட்டளை மூலம் 33 பாடப் பிரிவுகளில் பயிலும் ஒரு மாணவன் மற்றும் ஒரு மாணவிக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டு ஒவ்வொரு பாடப் பிரிவிலும் முதல்நிலை, இரண்டாம் நிலை பெறுகின்ற மாணவ, மாணவியர்க்கு கல்வி உதவித் தொகை வழங்கப்படும். இத்திட்டத்தினால் 132 மாணவ, மாணவியர் ஆண்டுதோறும் ரூ.4.50 இலட்சம் கல்வி உதவித் தொகை பெறுவார்கள்.

2. மாண்புமிகு அமைச்சர் கைத்தறி மற்றும் துணிநூல் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் உள்ள கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரின் பரிந்துரையை அரசு கவனமாக பரிசீலித்து, டாக்டர் எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளையின் கீழ் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு

/த.பி.பா./

வழங்கப்படும் கல்வி உதவித் தொகையை ஒரு மாணவன் மற்றும் ஒரு மாணவி என்பதுடன், கூடுதலாக இரண்டாம் நிலை பெறும் ஒரு மாணவன் மற்றும் ஒரு மாணவிக்கும் கல்வி உதவி தொகையினை கீழ்குறிப்பிட்ட விபரப்படி வழங்கிட அனுமதித்தும், இவ்வாறு வழங்குவதால் ஏற்படும் கூடுதல் செலவினத் தொகை ரூ.2,13,000/–ஐ டாக்டர் எம்.ஜி.ஆர். அறக்கட்டளையின் மூலம் தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் (Tamil Nadu Power Finance & Infrastructure Development Corporation Ltd., Chennai) முதலீடு செய்யப்பட்டுள்ள நிரந்தர வைப்பு நிதியில் இருந்து கிடைக்கப்பெறும் வட்டித் தொகையிலிருந்து மாணவ மாணவியர்க்கு வழங்குவதற்கு அனுமதித்தும் ஆணையிடுகிறது:–

| வ.எண் | பாடப்பிரிவு மொத்த மாணவ / மாணவியர்கள் | இரண்டாம் நிலை பெறும் மாணவ / மாணவியர்க்கு வழங்கப்படும் உதவித் தொகை |
|---|---|---|
| 1. | 12 | 5,000 |
| 2. | 18 | 3,500 |
| 3. | 36 | 2,500 |
| | 66 | |

(ஆளுநரின் ஆணைப்படி)

பெ.மு. பஷீர் அஹமது,
அரசு செயலாளர் (முகூபொ)

பெறுநர்
கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர், குறளகம், சென்னை – 600 108.
தனி அலுவலர் / மேலாண்மை இயக்குநர், கோ–ஆப்டெக்ஸ், சென்னை–600 008.
மாநில தலைமைக் கணக்காயர் (A & E) சென்னை – 600 018 / (பெயரில்)
மாநில தலைமைக் கணக்காயர் (CA), சென்னை – 600 018 / (பெயரில்)
சம்பள கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை – 600 001
மேலாண் இயக்குநர், தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம், சென்னை–600 108.
உறுப்பினர்கள், டாக்டர் எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு
அறக்கட்டளை, சென்னை – 600 108.
கைத்தறி மற்றும் துணிநூல் அமைச்சர் அவர்களின் சிறப்பு முதுநிலை
உதவியாளர், சென்னை – 600 009.

**நகல்:-**
நிதி (BGI / BGII / W&M/ Ind) துறை, சென்னை – 600 009.
கைத்தறி , கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் (ஏ1 / பி1) துறை, சென்னை–9

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

அரசு சார்புச் செயலாளர்